

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (16.01.2025) அன்று விருதுநகர் வட்டம், கோட்டையூர் கிராமத்தில் செயல்பட்டு வந்த சாய்நாத் பயர் ஒர்க்ஸ் பட்டாசு தொழிற்சாலையில் 04.01.2025 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.4 இலட்சம் வீதம் 6 நபர்களுக்கு மொத்தம் ரூ.24 இலட்சம் மற்றும் விபத்தில் காயமடைந்தவருக்கு ரூ.1 இலட்சம் என மொத்தம் ரூ.25 இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் வருகிற 21ம் தேதி முதல்வர் வருகையினை முன்னிட்டு நடைபெறும் பணிகளை தமிழ் நூலக கட்டிடத்தினையும் அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன் முனைவர் கோவி..செழியன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் , எம்.எல்.ஏக்கள் எஸ்.மாங்குடி, திருமதி தமிழரசி ரவிக்குமார், மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் நா.குணசேகரன், பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ரவி, மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் உள்ளனர்.

முதன்முதலில் குரல் கொடுத்து மாநில சுயாட்சியை காப்பாற்றியது போல்

# ஆளுநர்களின் அதிகார ஆட்டங்களுக்கும் தமிழ்நாடு முற்றுப்புள்ளி வைக்கும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!

சென்னை, ஜன.19-

மாநில சுயாட்சிக்காக எப்படி தமிழ் நாடு முதன் முதலில் குரல் கொடுத்து அதை காப்பாற்றியதோ அதைபோல ஆளுநர்களின் அதிகார ஆட்டங்களுக்கும் தமிழ்நாடு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குறிப் பிட்டுள்ளது.



தினகரன்

ஜனவரி 18, 2025 சனிக்கிழமை

மீண்டும் குட்டு

தமிழ்நாட்டு மண்ணுக்கு ஒவ்வாத, மக்கள் வெறுக்கும் வகையில் தேவையற்ற சர்ச்சை கருத்துகளை கூறி, அதன் மூலம் மாநிலத்தில் குழப்பங்களை உண்டாக்கி வருவது தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு வாடிக்கையாகிவிட்டது. நீட் தேர்வு விவகாரத்தில் தொடங்கி, இருமொழி கொள்கை, புதிய கல்விக்கொள்கை, சனாதனம், திராவிடம், திருவள்ளுவர், தமிழ்நாடு பெயர், மதச்சார்பின்மை நிலைப்பாடு, தமிழ்த்தாய் வாழ்த்து என ஆளுநரின் சர்ச்சை கருத்துக்களும், இதுதொடர்பாக அவரின் செயல்பாடுகளின் பட்டியலும் நீண்டு கொண்டே செல்கிறது.

மாநில அரசின் உரிமைகளுக்கும், செயல்பாடுகளுக்கும் எந்தளவுக்கு முட்டுக்கட்டை போட முடியுமோ அந்தளவுக்கு ஒன்றிய அரசின் சொல்படி செவ்வனே செயல்படுவதாக ஆளுநருக்கு எதிராக கண்டன குரல்கள் நாள்தோறும் ஒலிக்கும் அளவுக்கு அவரது செயல்பாடுகள் உள்ளன.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மக்கள் நலன்.

அது வருமாறு:-

தமிழ்நாட்டு மண்ணுக்கு ஒவ்வாத, மக்கள் வெறுக் கும் வகையில் தேவையற்ற சர்ச்சை கருத்துகளை கூறி, அதன் மூலம் மாநிலத்தில் குழப்பங்களை உண்டாக்கி வருவது தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு வாடிக்கை யாகிவிட்டது. நீட் தேர்வு விவகாரத்தில் தொடங்கி, இருமொழி கொள்கை, புதிய கல்விக்கொள்கை, சனாதனம், திராவிடம், திருவள்ளுவர், தமிழ்நாடு பெயர், மதச்சார்பின்மை நிலைப்பாடு, தமிழ்த்தாய் வாழ்த்து என ஆளுநரின் சர்ச்சை கருத்துக்களும், இதுதொடர்பாக அவரின் செயல்பாடுகளின் பட்டிய லும் நீண்டு கொண்டே செல்கிறது.

மாநில அரசின் உரிமைக ளுக்கும், செயல்பாடுகளுக் கும் எந்தளவுக்கு முட்டுக் கட்டை போட முடியுமோ அந்தளவுக்கு ஒன்றிய அர சின் சொல்படி செவ்வனே செயல்படுவதாக ஆளுநருக்கு எதிராக கண் டன குரல்கள் நாள்தோறும் ஒலிக்கும் அளவுக்கு அவரது செயல்பாடுகள் உள்ளன. தமிழ்நாடு சட்டப்பேரவை யில் மக்கள் நலன், மாநில நலன், எதிர்கால நலன் சார்ந்து நிறைவேற்றப்படும் சட்ட மசோதாக்களுக்கு கூட ஒப்புதல் அளிக்காம லும், திருப்பி அனுப்பாம லும் கிடப்பில் போட்டுக் கொண்டு அரசின் நிர்வாகத்தில் தலையீடு செய்து கொண்டு, தன்னை யாரும் கேள்வி கேட்க முடி யாது என்ற அதிகார மமதை யில் ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளார்.

“ஆட்டுக்கு தாடியும், நாட்டுக்கு கவர்னரும் தேவையில்லை” என்ற பேரறிஞர் அண்ணா வெளிப்படுத்திய உணர்வை யும், எண்ணத்தையும் தி.மு.க. இன்றைக்கும் உள் ளத்தில் பதிய வைத்துக் கொண்டிருப்பதாக தமிழ் நாடு முதல்வர் மு.க.ஸ்டா லின் காட்டமாக கூறிய தோடு ஆளுநரின் சர்ச்சை பேச்சுகளுக்கும், செயல்பா டுகளுக்கும் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதற்காக உச்ச நீதிமன் றத்தின் கதவுகளை தட்டி சட்ட போராட்டம் நடத்தி வருகின்றார். குறிப்பாக, தமிழ்நாடு அரசு சட்டமன் றத்தில் நிறைவேற்றி அனுப் பும் சட்ட மசோதாக்க ளுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வருவ தாகவும், குறிப்பிட்ட கால வரம்புக்குள் மசோதாக்க ளுக்கு ஒப்புதல் வழங்க உத் தரவிட வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் உள்ள பல்க லைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமனத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி வரு வதாகவும் இரண்டு ரிட் மனுக்களை தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தி ருந்தன.

இந்த மனுக்களை ஏற்க னவே விசாரித்த உச்சநீதி மன்றம், ஆளுநர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அர சுக்கு கட்டுப்பட்டவர் என் றும், சட்டமன்றத்தில் நிறை வேற்றப்படும் மசோதாக் களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரத்திலும் கோர்ட் தலையிட வேண்டிய நிலை ஏற்படும் என்று கண்ட னத்தோடு வழக்கினை ஒத் திவைத்திருந்தது. இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, ஒன்றிய அரசுக்கும், தமிழ் நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக் கும் ஒரு வார காலம் அவகா சம் கொடுத்து உரிய தீர்வு காணவில்லை எனில் நாங் களே விசாரித்து தீர்வு காண வேண்டிய நிலை ஏற்படும் என்று மீண்டும் அழுத்த மாக குட்டு வைத்துள்ளது.

பா.ஜ. ஆட்சியில் இல் லாத மாநிலங்களில் அம்மா நில அரசுக்கு குடைச்சல் கொடுக்க ஆளுநர்களை ஒன்றிய அரசு பயன்படுத்தி வருவதாக புகார் உள்ள நிலையில், உச்சநீதிமன்றத் தின் நேற்றைய எச்சரிக்கை என்பது ஆளுநர்களுக்கு மட்டுமல்ல ஆளுநர்களை இயக்கி வரும் ஒன்றிய அர சுக்கும் சேர்த்து விடப்பட்ட எச்சரிக்கையாகும். தமிழ் நாடு அரசு தாக்கல் செய் துள்ள இந்த வழக்கின் மீதான தீர்ப்பு என்பது மிக முக்கியமானதாக பார்க்கப் படும் என்பதோடு பா.ஜ. ஆட்சி செய்யாத பிற மாநில அரசுகளுக்கு முன்னுதாரண மாகவும் அமையும். மாநில சுயாட்சிக்காக எப்படி தமிழ்நாடு முதன்முதலில் குரல் கொடுத்து அதை காப் பாற்றியதோ அதை போலத் தான் ஆளுநர்களின் அதி கார ஆட்டங்களுக்கும் தமிழ்நாடு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறது.

இவ்வாறு அத்தலையங் கத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

தென்காசி - தலைமைச் செயற்குழு உறுப்பினர்

## பூ.ஆறுமுகச் சாமியின் தந்தை மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜன.19-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் பூ. ஆறுமுகச் சாமியின் தந்தை மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தென்காசி தெற்கு மாவட்டம் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் பூ. ஆறுமுகச்சாமி தந்தை இரா. பூல்த்தேவர் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் - தென்காசி தெற்கு மாவட்ட கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

துணை முதலமைச்சர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! தமிழர் திருநாள் விழா!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!



சென்னை, ஜன.19-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தமிழர் திரு நாள் விழாக்களில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்கும் நிகழ்ச்சி விவரம் வருமாறு:-

ஜனவரி 19 - சங்கரன் கோவில் - தென்காசி வடக்கு மாவட்டம்,

ஜன.20 - கடையம் - தென்காசி தெற்கு மாவட்டம்,

ஜன. 21 - திருநெல்வேலி மாநகர் -திருநெல்வேலி மத் திய மாவட்டம்,

ஜன. 22 - தூத்துக்குடி வடக்கு மாவட்டம்,

ஜன. 23 -புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்,

ஜன. 24 - ஒரத்தநாடு - தஞ்சை மத்திய மாவட்டம்,

ஜன. 25 - கும்பகோணம் - தஞ்சை வடக்கு மாவட் டம் ஆகிய இடங்களில் கழக அமைப்புச் செயலா ளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற் கிறார்.

# தேனி வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!



தேனி, ஜன.19-

தேனி வடக்கு மாவட்டக் கழக செயலாள ரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:

தமிழ்நாடு முதலமைச் சர், கழகத்தலைவர் அவர்க ளின் வழிகாட்டுதலின்படி தேனி வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் தேனி என்.ஆர்.டி நகரில் அமைந் துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று (19.01.2025 -ஞாயிற்றுக்கி ழமை) மாலை 5.00 மணிய ளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் பி.டி செல்லபாண்டியன்தலைமை யில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர் கழக செயலாளர்கள் சார்பு அணி அமைப்பாளர்கள் மற் றும் துணை அமைப்பாளர் கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவ ரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாள ரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள் ளார்

பொருள்:

மொழிப்போர் தியாகி கள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், கழக ஆக் கப்பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

கரூர் – குளித்தலை இராச்சாண்டர் திருமலையில்

# பொங்கல் திருநாள் - ஜல்லிக்கட்டு போட்டி!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்

கரூர், ஜன.19-

கரூர் மாவட்டம் ஆர். டி. மலையில் ஜல்லிக்கட் டுப் போட்டியை அமைச் சர் வி. செந்தில்பாலாஜி கொடியசைத்து துவக்கி வைத்தார். சிறந்த காளை உரிமையாளருக்கு கார் பரிசு, சிறந்த மாடுபிடி வீர ருக்கு பைக் பரிசு வழங்கி னார்.

கரூர் மாவட்டம். குளித்தலை வட்டம் இராச்சாண்டர் திருமலை யில் பொங்கல் திரு நாளை முன்னிட்டு ஜல் லிக்கட்டு போட்டி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். மின் சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஜல்லிக்கட்டு போட்டியை கொடிய சைத்து துவக்கி வைத்தார்.

முன்னதாக அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் மாடுபிடி வீரர்கள் அனைவரும் ஜல் லிக்கட்டு விதிமுறைகள் குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இவ்விழாவில் குளித் தலை சட்டமன்ற உறுப்பி னர் இரா.மாணிக்கம். மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் கா. பெரோஸ் கான் அப்துல்லா, மாவட்ட வருவாய் அலு வலர் ம. கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்கு னர் ஸ்ரீலேகா தமிழ்செல் வன், குளித்தலை சார் ஆட்சியர் திருமதி.தி சுவாதி ஸ்ரீ. இணை இயக் குநர் (கால்நடை பராம ரிப்பு) மரு.சாந்தி ஜல்லிக் கட்டு போட்டி குழுவினர் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜல்லிக்கட்டு போட்டி யில் மதுரை மாவட்டம் காளை உரிமையாளருக்கு கார் பரிசும், சிறந்த மாடு பிடி வீரர் பரிசு நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த வீரருக்கும் அமைச்சர் செந்தில் பாலாஜி வழங்கி னார்.


மதுரை மாவட்டம், செக்காரனியூர் கதிரவ னின் காளை சிறந்த காளையாக தேர்ந்தெடுக் கப்பட்டு கார் பரிசளிக் கப்பட்டது.

காளைகளை பிடித்த சிறந்த மாடுபிடி வீரருக் கான இரு சக்கர வாகனம் பரிசு நாமக்கல் மாவட்டம் எருமைப்பட் டியை சேர்ந்த கார்த்திக் என்பவருக்கு அமைச்சர் செந்தில் பாலாஜி வழங்கி னார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. மன்னார்

சனவரி 19 (1991)



கழகம் தொடங்கியபோதே உறுப்பினராகி பணியாற்றியவர்.

முதன்முதலாக தான் வசிக்கும் வடபெரும்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தை தொடங்கி அதன் செயலாளராக பொறுப்பு வகித்து தொடர்ந்து இருபது ஆண்டுகள் கிளைச் செயலாளர் பொறுப்பு வகித்தவர்.

வடபெரும்பாக்கம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், ஊராட்சி மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து மக்கள் பணியாற்றியவர்.

1966ல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



பொங்கல் திருநாளை முன்னிட்டு தூத்துக்குடி மாநகரம் அண்ணா நகர் பகுதி 30வது வார்டுக்கு உட்பட்ட டூவிபுரம் பகுதியில் நடைபெற்ற விழாவில் நலத்திட்ட உதவிகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ. கீதா ஜீவன் வழங்கினார். உடன் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பகுதிச் செயலாளர் ரவீந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி. அதிர்ஷ்ட மணி, வட்டச் செயலாளர் செந்தில்குமார் வட்டப் பிரதிநிதி கார்த்திக்கேயன், சுப்பிரமண்யன்,நாராயண ராஜ்,தங்க குமார்,சந்திர சேகர், மாணவரணி துணை அமைப்பாளர் கோகுல்நாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.